# குழந்தைகளுக்கு வேதாகமம்

வழங்குபவர்

# பிரியாவிடை பார்வோன்




எழுதியவர்: Edward Hughes

சித்தரிப்பவர்: Janie Forest

மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj

தழுவியவர்: Lyn Doerksen



**கதைகள்** 60 **ல்** 11

**www.M1914.org**

***Bible for Children,*** *PO Box 3, Winnipeg, MB R3C 2G1 Canada*



உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.


Tamil







அவர்களுடைய
ஆளோட்டிகள் வைகோல்
சேகரித்து மற்றும் சரியான
அளவு செங்கல்களை சரியான
நேரத்தில் கொடுக்காதவர்களை
சவுக்கை கொண்டு
அடித்தார்கள்.
3


தங்களுடைய க
ஷ்டங்களுக்கு
ஜனங்கள் மோசே
மற்றும் ஆரோனையும்
பழி கூறினார்கள்.
மோசே விண்ணப்பம்
செய்வதற்கு ஒரு
இடத்தைக்
கண்டுபிடித்தான்.
4


"என் தேவனே,
உம்முடைய
ஜனங்களை
நீர் விடுதலை
செய்யவில்லையே,"
என்று மோசே
அழுதான். "நான்
தேவன், நான்
ஜனங்களை வெளியே
கொண்டுவருவேன்,"
என்று தேவன் பதில்
சொன்னார்.
5


பின்பு தேவன் மோசேயையும்,
ஆரோனையும்
பார்வோனிடத்தில்
அனுப்பினார்.
வல்லமையுள்ள அந்த
ராஜா தேவனுடைய
ஊழியக்காரரிடத்தில்
தேவனிடத்திலிருந்து
அடையாளம்
கேட்டபோது,
ஆரோனின்
கோலானது சறுக்கி
செல்லும்
பாம்பானது.
6


"என்னுடைய
மந்திரவாதிகளை
அழையுங்கள்,"
என்று பார்வோன்
கர்ச்சித்தான்.
7


எகிப்திய மந்திரவாதிகள்
தங்களுடைய கோல்களை
தரையிலே போட்ட போது,
ஒவ்வொரு கோலும்
பாம்பாகமாறியது,
ஆனாலும் ஆரோனின்
கோல் எல்லாவற்றையும்
விழுங்கிப்போட்டது.
ஆனாலும் ஜனங்களை
விடுதலை செய்ய
மறுத்தான்.
8


மறுநாள் காலையில், மோசேயும், ஆரோனும் பார்வோனை நதியருகே சந்தித்தார்கள். ஆரோன் கோலை நீட்டிய போது, தேவன் தண்ணீரையெல்லாம் இரத்தமாக மாற்றினார். மீன்கள் செத்துப்போயிற்று!
ஜனங்கள் தண்ணீரை குடிக்க முடியவில்லை.
9


ஆனாலும் பார்வோன் தன் இருதயத்தைக் கடினப்படுத்தினான். இஸ்ரவேல் ஜனங்களை எகிப்திலிருந்து விட அவனுக்கு மனதில்லை.
10


மறுபடியும் மோசே பார்வோனிடத்தில் ஜனங்களை விடும்படிகேட்டான், பார்வோன் மறுபடியும் மறுத்தான். தேவன் மறுபடியும் இன்னொரு வாதையை அனுப்பினார்.
11


எகிப்து தேசம் முழுவதும் தவளைகளால் நிறைந்தன. எல்லா வீடுகளிலும், எல்லா அறைகளிலும், சமையல் செய்யும் பாத்திரங்களில் கூட தவளைகள் ஏறி குதித்தன.
12


"எனக்காக விண்ணப்பம் செய்யுங்கள், தேவன் தவளைகளை வெளியேற்றற்றும் என்று பார்வோன் கெஞ்சினான். "நான் ஜனங்களை விட்டுவிடுவேன்," ஆனால், தவளைகள் எல்லாம் போனபின்பு, பார்வோன் தன் மனதை மாற்றிக்கொண்டான். அவன் அடிமைகளை விடுவிக்கவில்லை.
13


பின்பு தேவன் கோடிக்கணக்கான சின்ன சின்ன பூச்சிகளான பேன்களை அனுப்பினார். ஒவ்வொரு மனிதனும், மிருகமும் அது கடித்ததினாலே சொரிந்தார்கள், ஆனாலும் பார்வோன் தேவனுக்கு விட்டு கொடுக்கவில்லை.
14


மறுநாள் தேவன் திரளான வண்டுகளை அனுப்பினார். எகிப்தியரின் பிராணிகளை கொன்றுபோட தேவன் வியாதிகளை அனுப்பினார்.
15


தேவன் வலிக்கும் கொப்பளங்களை அனுப்பினார். ஜனங்கள் மிகவும் கஷ்டப்பட்டார்கள். ஆனாலும் பார்வோன் தேவனை எதிர்த்தான்.
16


கொப்பளங்களின் வாதைக்குப் பின்னால், தேவன் திரட்சியான வெட்டுக்கிளிகளை அனுப்பினார். அந்த வெட்டுக்கிளிகள் தேசத்தின் பச்சை செடிகளையெல்லாம் தின்று தீர்த்தன.
17


பின்பு தேவன் மூன்று நாட்களுக்கு காரிருளை அனுப்பினார். ஆனாலும் பிடிவாதமுள்ள பார்வோன் இஸ்ரவேல் ஜனங்களை விடுதலை செய்யவில்லை.
18


"நான் இன்னுமொரு வாதையை அனுப்புவேன்," என்று தேவன் எச்சரித்தார், "சரியாக நடு இரவிலே, மனிதனுக்கும் மற்றும் மிருகங்களுக்கும் பிறந்த முதற் பிள்ளைகளை சாகப்பண்ணுவேன்."
19


இஸ்ரவேலர்கள் தங்களுடைய வீட்டின் நிலைக் கால்களிலே ஆட்டுக்குட்டியின் இரத்தத்தை பூசினால், அவர்களுடைய முதற் பிறந்த குழந்தைகள் காப்பாற்றப்படுவார்கள்.
20


நடு இரவிலே, எகிப்திலே ஒரு
கூக்குரல் உண்டாயிற்று
எங்கும் சாவு உண்டாயிற்று.
ஒவ்வொரு வீட்டிலும்
ஒருவராகிலும் இறந்து
போனதாகக் கண்டார்கள்.
21


"வெளியே போங்கள்" பார்வோன்
மோசேயிடம் கெஞ்சிக்கேட்டான்.
"போங்கள் உங்கள் தேவனை
சேவியுங்கள்." துரிதமாக
தேவனுடைய ஜனங்கள்
அணிவகுத்து எகிப்தின்
எல்லையை தாண்டினார்கள்.
22


பஸ்கா இரவை ஞாபகத்தில்
வைத்துக்கொள்ளும்படி தேவன்
மோசேக்கு சொல்லியிருந்தார். ஏனெனில் தேவதூதன்
இஸ்ரவேல் ஜனங்களின் வீடுகளை விட்டுவிட்டு,
பார்வோன் மற்றும் அவனுடைய மக்களை அழித்தார்.
23


430 வருடம் எகிப்தில் இருந்தபின்,
தேவனுடைய ஜனங்கள் இப்போது
விடுதலைப் பெற்றார்கள். பகலிலே மேகஸ்தம்பத்தினாலும்,
இரவிலே அக்கினிஸ்தம்பத்தினாலும் தேவன்
அவர்களை வழி நடத்தினார்.
24


ஆனாலும்
பார்வோன் இன்னும்
இஸ்ரவேலரின் கதையை
முடிவுபெறவிடவில்லை.
திரும்பவும், அவன்
தேவனை மறந்தான்,
தன் மனதை
மாற்றிக்கொண்டான்,
தன்னுடைய படையை
சேர்த்து, அடிமைகளை
பின் தொடர்ந்தான்.
25


வெகுவிரைவிலே,
அவர்கள்
மலைப்பாறைகளுக்கும்,
கடலுக்கும் மத்தியில்
சிக்கிக் கொண்டதைப்
பார்த்தான்.
26



"தேவன் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார்,"
என்று மோசே சொன்னான். மோசே முன்னோக்கி
தண்ணீரின் அருகாமையில் சென்று,
தன்னுடைய கைகளை நீட்டினான்.

27



ஒரு பெரிய
அற்புதம் நிகழ்ந்தது.
தேவன் தண்ணீர்
மூலம் ஒரு வழியை
ஏற்படுத்தினார்.
ஜனங்கள் பத்திரமாக
கடலைத்
தாண்டினார்கள்.

28

பின்பு பார்வோன் படை முழுவதும் செங்கடலில் மூழ்கின.
"இப்பொழுது நாம் அவர்களை பிடிப்போம்," என்று
போர்ச்சேவகர்கள் எண்ணினார்கள். ஆனால்
தேவனோ தண்ணீரை மூடினார்.



29

எகிப்தின் வலிமையான படை விழுங்கப்பட்டது.
இஸ்ரவேலின் தேவன் எல்லாரிலும் மேலான
தேவன் என்பதாக இப்பொது
பார்வோனுக்கு தெரியவந்தது.



30

பிரியாவிடை பார்வோன்

தேவனுடைய வார்த்தையாகிய
வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

யாத்திராகமம் 4-15

"தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது
வெளிச்சம் கொடுக்கிறது." சங்கீதம் 119:130

நாம் தவறுதல்களை செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும்.
அதை அவர் பாவம் என்று அழைக்கிறார். பாவத்திற்கு தண்டனை
மரணமாகும்.

தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த
குமாரனாகிய இயேசுவை இந்த உலகத்திற்கு அனுப்பி, நம்முடைய
தண்டனையை அவர் ஏற்றுக் கொண்டு, நமக்காக சிலுவையில்
மரணமடையச் செய்தார். இயேசு உயிரோடு வந்து, திரும்பவும்
பரலோகத்திற்கு சென்றார். இப்போது தேவனாலே நம்முடைய பாவங்களை
மன்னிக்க முடியும்.

உங்களுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்ப விரும்பினால், இந்த
வாக்கியங்களை தேவனிடம் சொல்லுங்கள்: பிரியமுள்ள தேவனே
இயேசுவே என்னுடைய வாழ்க்கைக்குள் வாரும், என்னுடைய பாவங்களை
மன்னியும், அதன் மூலம் நான் புதிய வாழ்வை இன்று பெற்று, உம்மோடு
எப்போதும் இருக்க உதவி செய்யும். நான் உம்முடைய பிள்ளையாக வாழ
உதவி செய்யும். ஆமென்.
யோவான் 3:16

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து, தேவனுடன் பேசவும்.